**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 127/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 12 |
| Name (திரு/திருமதி) | : முனியசாமி |
| Father's Name/ Husband's Name | : முத்துமணி |
| Village & Taluk | : வன்னாத்தியந்தல் |
| Calling | : கூலி |
| Age | : 32 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2025**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ராஜசேகர் எனக்கு தெரியும். கடந்த 21.08.2015 ம் வருடம் ஒரு நாள் நானும் என்னுடன் ராஜசேகர் என்பவரும் மற்றும் ஒரு நபர் எங்களது இரு சக்கர வாகனத்தில் அப்பம்பட்டில் இருந்து செஞ்சியை நோக்கி வந்து கொண்டிருந்தோம். அந்த இரு சக்கர வாகனத்தை நான் ஓட்டிக்கொண்டு சென்றேன். அப்பம்பட்டு கோனை ரோடு அருகே இரவு 10.45 மணிக்கு செல்லும்போது எங்களுக்கு முன்னால் சென்ற கரும்பு லோடு டிராக்டரில் நான் மோதிவிட்டேன். அப்போது இருட்டாக இருந்தது எனக்கு முன்னால் சென்ற மேற்படி வாகனத்தில் மின்விளக்கு மற்றும் சமிக்ஞை விளக்கு இல்லாத காரணத்தினால் மேற்படி வாகனம் எனக்கு தெரியவில்லை எனவே நான் அதன் மீது மோதிவிட்டேன். அதில் எனக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. எனக்கு பின்னால் அமர்ந்து வந்த ராஜசேகர் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேலும் என்னுடன் இரு சக்கர வாகனத்தில் வந்த மற்றொரு நபருக்கு காயம் ஏற்பட்டது. மேற்படி டிராக்டர் வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் அன்று பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 21.08.2015ம் தேதி இரவு 10.45 மணிக்கு நானும், எங்கள் கிராமத்தை சேர்ந்த ராஜசேகர் மற்றும் ஒரு நபருடன் அப்பம்பட்டு கோனை நோட்டில் இரு சக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். அப்போது எங்களுக்கு முன்னால் சென்ற TN 32 M 0860 என்ற டிராக்டர் ஓட்டுநர் எங்களுக்கு பின்னால் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிக்கொண்டு வந்து எங்கள் மீது மோதினார் என்றால் இல்லை. இவ்வழக்கின் எதிரி ராஜா என்பவரை விபத்து நடந்த நேரில் பார்த்ததாக காவலர்கள் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மருத்துவமனையில் இருந்தபோது இவ்வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை விசாரித்தனர். முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதியை தான் அவர்களிடமும் கூறினேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.